REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

புற்று நோய் ஆராய்ச்சிக் கழகம்

கல்கத்தாவில் அமைக்க யோசனை

புற்று நோய் பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்கு, புற்று நோய் தேசிய ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை கல்கத்தாவில் நிறுவ, இந்தியப் பேரரசு எண்ணிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுவரை விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஏமாற்றிக்கொண்டே வருகிற புற்று நோய்க்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிவது—இந்த ஆராய்ச்சிக் கழகத்தின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: ஆடி 5உ வியாழன் (21—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 6உ வெள்ளி (22—7—55) [இதழ் 32

அசாம் புது வாழ்வு பெறுகிறது!

ஒரு புதிய எண்ணெய் திரட்டும் சாலை

வெளிநாட்டுத் தொழில் நிலையத்துடன் அரசாங்கக் கூட்டு

மூலதனப் பஞ்சத்தைக் காட்டி தொழில் முயற்சி கைவிடப்படவில்லை

அசாம் புது வாழ்வு பெறுகிறது!

அங்குள்ள ஊக்ரிஜான், மோரான் பகுதியில் பூமிக்கடியில் மறைந்து கிடக்கும் எண்ணெயைத் திரட்டி எடுத்துப் பயன்படுத்தும் முயற்சியில் அசாம் அரசாங்கமும், இந்தியப் பேரரசும் ஈடுபட்டுள்ளன.

அத்தொழில் ஏற்பாட்டில், வெளி நாட்டுத் தொழில் நிலையம் ஒன்றுடன் இந்தியப் பேரரசு கூட்டுச் சேருகிறது.

மொத்த மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்கை இந்தியப் பேரரசும், மீதமுள்ள இரண்டு பங்கை வெளி நாட்டு நிறுவனமும் முதலீடு செய்ய ஒப்பியுள்ளன.

புதிய எண்ணெய் திரட்டும் சாலைக்கு 'அசாம் ஆயில் கம்பெனி' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

அக்கம்பெனிக்கு எண்ணெய் திரட்டும் பணியை முதற்கண் 20 ஆண்டுகளுக்குக் குத்தகையாகக் கொடுக்கப்படுகிறது; இந்தியப் பேரரசு விரும்பினால், அக்குத்தகையை மேலும் 20 ஆண்டுகளுக்குப் புதுப்பித்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்தியப் பேரரசின் சார்பில், மேற்படி தொழிலுக்கு போடப்படும் மூலதனத்தில் சரி பகுதியை அசாம் அரசாங்கம் போட இருக்கிறது.

அசாம் அரசாங்கச் சார்பில் ஒருவரும், இந்தியப் பேரரசின் சார்பில் ஒருவரும் அக்கம்பெனியின் செயற் குழுவில் இடம் பெறுவர்.

அத்தொழில் நிறுவனம் விரிவு பெறும் ஒவ்வொரு கட்டத்திலும், அதிகப்படியான இந்தியர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும்.

தொழில் நுணுக்கம் தெரிந்த இந்தியர்கள் கிடைக்காதபட்சத்திலேயே, அவைகளுக்கு வெளிநாட்டினரை நியமிக்க வேண்டும்

தேவைப்படும் அளவிற்குத் தொழில் நுணுக்கம் தெரிந்த இந்தியர்கள் இல்லாததினால், அக்குறைபாட்டைக் களைய உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தேவைப்படும் தொழில் பயிற்சியை இந்தியர்களுக்கு அளிக்கச் செய்து, குறுகிய காலவரையறைக்குள் அவர்கள் அனைவரையும் மேற்படி தொழிலில் அமர்த்திக்கொள்ள வேண்டும்.

இப்பயிற்சி அளிக்கும் வசதியைக் கொண்டு, உள்நாட்டின் பிறபகுதிகளில் எண்ணெய் பற்றிய ஆராய்ச்சி நடத்துவதற்கான தொழில் நுண்ணறிவு பெற்ற ஒரு இந்தியர் அணியையும் உருவாக்க வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகள், வெளிநாட்டுத் தொழில் நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தொழில் நிறுவனத்தில் போடப்படும் மூலதனம் ரூபாய் இனத்தில் கணக்கிடப்படும்.

இந்தியா சார்பில் இடப்படும் மூலதனம் அரசாங்க நிலையிலேயே இடப்படுமேயல்லாது தனி நபர்கள் அதில் பங்கு பெறமுடியாது.

தொழில் திட்டத்தின் விரிவான நடைமுறை ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு அசாம் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அக்டோபர் முதல் தொழில் துவங்கப்பட இருக்கிறது.

அசாமில் உள்ள லட்சுமிபூர் மாவட்டத்தில் சுமார் 450 சதுரமைல் பரப்பளவில் ஊக்ரிஜான், மோரான் பகுதிகள் உள்ளன. அங்கு ஏற்கனவே ஆறு எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டுவிட்டன.

இங்கு எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படுவதினால் குருட் எண்ணெய் விலை குறையுமா என்பதை இந்திய அரசாங்கம் பூரண விசாரணைக்குப் பிறகு அறிவிக்கும் என்று தெரியவருகிறது.

கோடையில் உஷ்ணம் 120 டிகிரிக்கும் அதிகமாக உயரும்போது, எண்ணெய் ஊற்றுக்களில் இயங்கும் நுல்லிய இயந்திரங்கள் வேலை செய்வதில்லை; அதற்காக அந்தப் பிரதேசத்தைக் குளிர்விக்க, 'ஏர் கண்டிஷன்' சாதனங்கள் கிடைத்ததும்தொடர்ந்து வேலை நடைபெறும்; எனவே, முயற்சிகள் தோற்றுவிட்டன

முதலாளித்துவம்!

"இன்று, 'பழமையாகிவிட்டது' என்பதைத் தவிர முதலாளித்துவத்திற்கு ஒரு கேடும் வந்துவிடவில்லை,"

என்று, பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிதரின் 'பஞ்சாமிர்தம்' புளிக்கிறது!

உலக இளைஞர் திருவிழாவுக்குச் செல்ல 150 பேருக்கு அனுமதி மறுப்பு

கல்கத்தா, ஜூலை 20—

ஐந்தாவது உலக இளைஞர் திருவிழா வார்சாவில் வரும் ஜூலை 25 முதல் நடைபெறவிருக்கிறது. அதில் கலந்துகொள்வதற்கு, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சுமார் 150 இளைஞர்களுக்கு 'பாஸ்போர்ட்' தர இந்திய சர்க்கார் மறுத்துவிட்டதாக, சுகுமார் குப்தா என்ற, விழாவுக்கான பூர்வாங்க அமைப்புக் குழுவின் 'கன்வீனர்' தெரிவித்திருக்கிறார்.

சுமார் 180 பேர் அனுமதி கோரியதற்கு 25 பேர்களுக்கு மட்டுமே இதுவரை அனுமதி தரப்பட்டிருப்பதாகவும் அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் எதையும் அரசாங்கம் தெரிவிக்கவில்லையாம்; ஆனால், சொந்தச் செலவில் வார்சா செல்பவர்களை அனுமதித்திருப்பதாயும், விழாக் குழுவினரிடமிருந்தோ, வெளிநாட்டு நண்பர்களிடமிருந்தோ போக்குவரத்துக்கான பணம் பெற்றுச் செல்பவர்கள் வார்சா செல்ல வேண்டாமென சர்க்கார் எண்ணுவதாகவும், அனுமதி மறுக்கப்பட்டவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும், தம்மிடமும் கூறப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

"இந்தக் கொள்கை இந்திய சர்க்கார் அறிவித்திருக்கிற—பல நாடுகளிடையேயும் அமைதியான கூட்டுறவு, கலாச்சாரப் பரிமாற்றம் முதலிய கொள்கைகளுக்கு மாறுபட்டதாகும்," என்றும் சுகுமார் குப்தா குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, அதிகாரிகள் தங்களின் போக்கை மாற்றிக்கொண்டால் அன்றி, கூறு போடப்பட்ட பிரதிநிதிக் குழு எந்த ஒரு விழாவிலும், கலந்துகொள்ள இயலாது என்பதால் தாங்களும், தங்கள் குழுவை அனுப்ப மறுத்துவிடலாம் என்று தெரிய வருகிறது.

என்று வெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவையாகும்" என்று, மந்திரி மாளவியா தெரிவித்திருக்கிறார்.

நேபாள புரட்சித் தலைவர்

நேபாள புரட்சித் தலைவரான டாக்டர் கே. ஐ. சிங், நேபாளம் திரும்புவதற்கு சீன சர்க்கார் அனுமதித்துவிட்டதாக நேபாள சர்க்காருக்கு அறிவித்திருப்பதாக பண்டிதநேரு தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாப் பிரதேச காங்கிரஸ்-அமைச்சர் குழு அமளி!

அகாலியர் மீது தடையை திரும்பப் பெற்றதற்குக் கண்டனம்

தம் மீது நம்பிக்கை இருக்கிறதா என்று அறிய முதல் மந்திரி முயற்சி

பண்டித நேருவிற்கு மரியாதை காட்ட தடை ரத்து செய்யப்பட்டது எனும் பித்தலாட்டம் அம்பலம்

சாந்திகார், ஜூலை 20—

மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக ஒலி முழக்கம் எழுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை, சர்க்கார் நீக்கியதை ஆட்சேபித்து, பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் செயற் குழு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

மூல்சந்த் ஜெயின் என்பார் கொண்டுவந்த அந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவாக 13 வாக்குகளும், எதிராக நான்கு வாக்குகளும் பதிவாயினவாம்.

மாநில காங்கிரஸ் தலைவரான கியானி குருமுக் சிங் முசாபீர், தீர்மானத்தின் முழு விவரங்களைக் கூற மறுத்துவிட்டிருக்கிறார்.

செயற் குழு உறுப்பினர்களாயிருக்கும் இரு மந்திரிகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர் என்று தெரிய வருகிறது.

முதன்மந்திரி பீம்சேன் சச்சார், மற்றைய மந்திரிகள் எல்லோரும் விசேட அழைப்பின் பேரில் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

பஞ்சாப் காங்கிரஸ் செயற் குழு உறுப்பினர்களின் உள்ளக்கிடக்கையை காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு அறிவிக்கத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

'நம்பிக்கை இருக்கிறதா?' என அறிய முயற்சி

தடையுத்தரவை நீக்கியதற்கு எதிரான முடிவை பிரதேச காங்கிரஸ் செயற்குழு மேற்கொண்டிருப்பதால் முதன் மந்திரி பீம்சேன் சச்சார், சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைக் கூட்டி அவர்களிடம், தன்மீது நம்பிக்கை தெரிவிக்குமாறு கோரப் போவதாகத் தெரிகிறது.

மந்திரி சபை அங்கத்தினர்கள் முழுவதும் கூடி, முதன் மந்திரியின் நடவடிக்கையை வரவேற்றிருக்கின்றனராம்.

தடை நீக்கம் — தாராசிங் வரவேற்கிறார்

'தடையுத்தரவு நீக்கப்பட்டிருப்பது, வரவேற்கத்தக்கது; சிறையிலிருந்து வெளியேறும் அகாலிகள் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடக்கூடாது; நாட்டில் உள்ள சீக்கியர் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்,'

என்று, மாஸ்டர் தாரா சிங் கேட்டுக்கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

பெப்சு சட்டசபையில்!

பாட்டியாலா, ஜூலை 20—

பெப்சு சட்டசபையில் உள்ள அகாலி உறுப்பினர்கள், அமிர்தசரசில் கடந்த ஜூலை 4-ல், அகாலிதள கிளர்ச்சியை ஒட்டி நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றதாகத் தெரிகிறது.

குளத்தைத்தோண்டுகையில் கொடிய ஆயுதங்கள்!

ஐதராபாத்திற்கு அருகில் 'மீர் அலாம் எனும் குளத்தருகில் ஐதராபாத் போலீசார் மண்ணைத் தோண்டிப்பார்க்கையில், ஒரு இடத்தில் ஏராளமான துப்பாக்கிகளும், கத்திகளும், மற்றும் பல பயங்கர ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டனவாம்.

ரஜாக்கர்களால் மேற்படி ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறதாம்!

நஞ்சு கலந்த தயிர் உண்ட எழுவர் மரணம்

ராஜ்கோட்டிற்கு அருகில் உள்ள வாவ்டி எனும் கிராமத்தில், ஒரு வயலில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் வேலை செய்து கொண்டிருக்கையில், நச்சுப் பாம்பின் நஞ்சு கலந்திருந்த தயிரை, உணவுடன் தங்களுக்குத் தெரியாமலே உட்கொண்டதின் விளைவாக திடீரெனக் கீழே விழுந்து மாண்டனராம்!

பிக்கானீர் புகைவண்டி நிலையத்தில், ஒரு சாமான் வண்டியிலிருந்து பொருட்கள் இறக்குகையில், 'ஊதுவத்தி' என்று எழுதப்பட்டிருந்த வெடி மருந்துப் பார்சலொன்று திடீரென வெடித்ததாகவும், இதன் விளைவாக அதனை இறக்கிய 3 பேர்கள் பலத்த காயம்பட்டனர் என்றும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—7—'55 வியாழன்

அலகாபாத் 'சரக்கு'!

'அதோ, அந்தப் பால் மிட்டாய் வாங்கிக் கொடு.'

'அது வேண்டாம்; அது மட்டமானது. அதைக்காட்டிலும் உயர்ந்த பாதம் அல்வா வாங்கித் தருகிறேன்!'

★

'அப்பா! எனக்கு ஒரு கோடிட்ட சட்டை தைத்துக் கொடு.'

'அதுவா? அது எதற்கு? அதை ஒரு அசல் பட்டுத் துணியுடன் ஒப்பிட்டுப் பார்! அப்பொழுதுதான் நீ கேட்கும் கோடிட்ட சட்டையின் மட்டத்தன்மையைத் தெரிந்து கொள்ள முடியும்!'

★

'மண்ணால் செய்த மானமதுரை கூஜா ஒன்று வாங்கிக் கொடுங்கள்; கோடையில் குளிர்ந்த நீராகக் குடிக்க உதவும்.'

'மானமதுரையில் செய்ததாக இருந்தால் என்ன? அதுவும் மண்தானே? கீழே விழுந்தால் உடைந்துவிடும். அதை ஒரு வெள்ளிப் பாண்டத்துடன் ஒப்ப வைத்துப் பார்! அப்பொழுது நீ தெரிந்துகொள்வாய், வெள்ளிப் பாண்டத்தைவிட மண் பாண்டம் எவ்வளவு மட்டமானது என்ற உண்மையை!'

★

இவ்வாறு, சாதாரணமான—ஆனால் தேவையான மிட்டாய் கேட்கும் போக்கையும் நோக்கையும் மாற்றி, வேறு ஒன்றில் குழந்தையின் கருத்தைத் திருப்ப, ஒரு உயர்ந்த தின்பண்டத்தின் அருமை பெருமையைக் கூறி, மிட்டாய் கேட்பதைக் கைவிடும்படி செய்து விடுவான் உளவறிந்த தகப்பன்.

பட்டாடையின் சிறப்பை மிகைப்படுத்திக் காட்டி, பஞ்சுத் துணியைத் தாழ்த்திப்பேசி, சாதாரண சட்டை கோரிய சிறுவனின் கவனத்தை வேறு ஒன்றின் பக்கம் இழுக்க ஏற்பாடு செய்ய முயற்சிப்பான் சிறுவர்கள் மனப்போக்கு கற்றுள்ள கபடன்!

வெள்ளிப் பாத்திரத்திற்கும் மண் பாண்டத்திற்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமைகளை விளக்கிக் கூறி, பொருளை வாங்க விரும்பிய மனையாட்டி, அவ்விருப்பத்தைத் தானாகக் கைவிடும்படி செய்வதில் முழு வெற்றி பெற்றுவிடுவான், பெண்களை மயக்கத் தெரிந்துள்ள மாயாண்டி!

குழந்தையை ஏய்க்கக் கற்ற உளவறிந்த தகப்பன், சிறுவனைத் தடுக்கத் தெரிந்த கபடன், மனைவியை மயக்க அறிந்த மாயாண்டி—ஆகிய மூவரும் மேற்கொண்ட போக்கை, ஒழுங்காகவும், திறம்படவும் செயலாற்ற முனைந்திருக்கிறார் அலகாபாத் பண்டிதர்—இந்தியப் பிரதமர்!

அந்தப் போக்கிற்கு—முறைக்கு, அலகாபாத் 'சரக்கு' என்றுகூடத் திட்டவட்டமாகக் கூறலாம்.

அகாலி தளக் கிளர்ச்சியைக் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, பண்டிதர் தந்துள்ள பதில் விசித்திரமானதாகவும் இருக்கிறது; அரசியல் விபரீதம் போலவும் தொனிக்கிறது!

'அகில உலகக் கண்ணோட்டம்' என்ற கருவூலத்தின் மூலம்தான் ஒவ்வொரு பிரச்சினையையும் நோக்க வேண்டும் என்பது, பண்டிதரின் பலகாலப் பல்லவியான 'அகில உலகக் கண்ணோட்ட'த்திற்கும் உண்டு என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால் பண்டிதர் மட்டும், இக்கோட்பாட்டை ஒப்பார்!

குறிப்பிட்ட ஒவ்வொரு கருத்தையும்—கோட்பாட்டையும், அது அதற்குரிய உண்மை நிலைகளையும், விளைவுகளையும் நன்கு ஆராய்ந்து அறிந்து, அதனால் பெறப்படும் முடிவுகளைக் கொண்டு, அவைகளுக்குச் சார்பாகவோ எதிர்ப்பாகவோ தீர்ப்பளிக்க வேண்டியதுதான் முறையாகும்—அதுதான் நீதியும் நேர்மையும் ஆகும். இந்தப் பெரும் போக்கு அவரிடம், பண்டிதராக இருந்தபோதும் இருந்ததில்லை—இந்தியப் பிரதமரான பிறகும் இருந்திடக் காணோம்.

தான் விரும்பாததை, தனது கருத்துக்கு மாறுபட்டு காணப்படுவனவற்றைப் பண்டிதர் மறுத்திட நினைத்தால், அதற்குரிய நியாயங்களை எடுத்துக்காட்டி மறுத்திட வேண்டும். ஆனால் பண்டிதரோ, 'உலகக் கண்ணோட்டம்' என்ற பொருந்தாக் கூற்றை முன் வைத்து, தனது கருத்துக்கு மாறுபட்டுக் காணப்பெறும் கருத்துக்களை வீழ்த்தப் பார்க்கிறார்—அதையே செயற்கரிய பெரும் செயலாகவும் செய்து வருகிறார்!

இரும்பைப்பற்றி பிரச்சினை எழுந்தால், இரும்பின் தரம் பற்றியும், பயன் பற்றியும்தான் பேச வேண்டும் என்பது சாதாரண அறிவு.

ஆனால் உலகக் கண்ணோட்டப் பண்டிதரோ, இரும்பைத் தங்கத்துடன் ஒப்பிட்டு, 'இரும்பு எதற்கு? பொன்னின் பெருமையைப் போற்றுங்கள்!' எனப் போதனை புரியக் கிளம்பிவிடுகிறார்! விவகாரத்திற்குப் பொருந்தாதப் பேச்சு!

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் பொருத்தம் பார்த்துப் பேசுவதுபோல் இருக்கிறது பண்டிதரின் 'உலகக் கண்ணோட்டம்!'

பஞ்சாபில் அகாலியர் மொழி வழி கோரிக்கை முழக்கம் செய்வது தடுக்கப்பட்டது, அங்குள்ள காங்கிரஸ் அரசாங்கத்தால்.

மொழிவழி ஏற்பாடு, இப்பொழுது, இந்தியப் பிரதமர் உள்பட காங்கிரஸ் கட்சிக்கு எட்டியாக இருக்கிறது. எனவே, அதை ஒப்ப மறுப்பதுடன் ஒழிக்கவும், அரசாங்க அடக்குமுறை பலங்கொண்டு வெளிப்படையாகவும், சொந்தக் கட்சி துணைகொண்டு மறைமுகமாகவும், காங்கிரஸ் ஆளவந்தார்கள் முயற்சித்து வருகின்றனர்.

அகாலியர் மொழி வழி மாநில கோரிக்கை முழக்கத்தைச் சட்டப்படி தடுப்பதின் மூலமும், சொந்தக் கட்சியினரை ஏவி அம்முழக்கத்திற்கு எதிராக முரண்படும் முழக்கத்தை முழக்கச் செய்வதின் மூலமும், மொழி வழி மாநில கோரிக்கையை ஒழித்துக்கட்ட பஞ்சாப் அரசாங்கம் முன்வந்தது.

'மொழி மாநிலம் வேண்டும்' என அகாலி சீக்கியரும், 'மகா பஞ்சாப்' வேண்டுமென காங்கிரஸ் சீக்கியரும் ஊர்வலமாகச் சென்று முழக்கமிடத் தொடங்கினர். இதனால் குழப்பமும் கொந்தளிப்பும் விளைவானதில் ஆச்சரியம் என்ன?

'மகா பஞ்சாப்' முழக்கத்தை முழக்கத் தூண்டியது காங்கிரஸ் கட்சியேயாகும். அதனால், அகாலியரும்—காங்கிரஸ் அகாலியரும் கைகலப்பர்; அமைதி கெடும்; குழப்பம் உருவாகும்; அதைப் புகலாகக் கூறிக்கொண்டு, அகாலியர்மீது அடக்குமுறையை ஏவி, அவர்களை ஒடுக்கிவிடலாம் என்று முன்கூட்டியே திட்டமிட்டுத்தான் பஞ்சாப் காங்கிரஸ் ஆளவந்தார்கள், அகாலியர் கோரிக்கையில் நடந்துகொண்டு இருக்கிறார்கள்.

பஞ்சாப் காங்கிரஸ் அரசாங்கத்தின் இப்போக்கு, 'அமைதி காக்கும் பணி! ஒழுங்கை நிலைநாட்டும் தொண்டு!' என்கிறார் உலகக் கண்ணோட்டச் சீமான்!

தங்கள் செய்கை மூலம் குழப்பம் ஏற்படும் சூழ்நிலையை வலுவில் திணித்து, அதை நேர் செய்வது என்ற பெயரில் அகாலியர் மீது அடக்குமுறைகளை ஏவின பஞ்சாப் காங்கிரஸ் அரசாங்கத்தின் இழி செயலில், தனது உயர்ந்த 'உலகக் கண்ணோட்டம்' இல்லாமல் இருக்கிறதே என்பதில் இந்தியப் பிரதமர் வெட்கப்படவுமில்லை — வேதனைப்படவுமில்லை!

'உலகம் மாயை; உலக இன்பம் அற்பமானது—அழியக்கூடியது! அழியாப் பேரின்பத்தைத் தேடுவதே ஜீவ லட்சியம்!' என்று குடந்தை மாமிசப் பிண்டம் பேசித் திரிவதற்கும், எதற்கெடுத்தாலும் 'உலகக் கண்ணோட்டம்' என்று இந்தியப் பிரதமர் கர்ஜிப்பதற்கும், அடிப்படை தத்துவ ரீதியில் கடுகளவும் வேற்றுமை கிடையாது. 'ஒன்று ஆத்மார்த்தம்; மற்றொன்று அரசியல்!' என்பர் சில பலர். ஆனால் இரண்டும் தனி மனித நல்வாழ்வை, மற்றொன்றுக்கு அடகுவைக்கத் தூண்டும் ஆபத்து நிரம்பியதேயாகும். குடந்தைச் 'சரக்கு' போலவேதான், அலகாபாத் 'சரக்கும்' தனி மனிதனின் உரிமை வேட்கையை ஒழிக்க எழுந்துள்ளதாகும்.

மாநில புனரமைப்புக் குழு அறிக்கை

மாறுபட்ட கருத்துக்களையே உறுப்பினர்கள் தெரிவிக்கக்கூடும்?

ஏறக்குறைய 9,000 பேர் குழுவிடம் 'வாக்குமூலம்' கொடுத்துள்ளனராம்!

மாநில புனரமைப்புக் குழுவினரின் அறிக்கை வருகிற செப்டம்பர் திங்களில் நிச்சயமாக இந்திய சர்க்காரிடம் தரப்பட்டுவிடும் என்று சொல்லப்படுகிறது.

மாநில புனரமைப்புக் குழு தனது அறிக்கையை சர்க்காருக்கு ஜூன் இறுதிக்குள் கொடுத்துவிட வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருந்தும், பின்னர், அக்கால வரையறை தங்களுக்குப் போதாது என்று மேற்படி குழு கேட்டதற்கிணங்க, அதனை செப்டம்பர் மாதம் வரை நீடித்திருந்ததும் நினைவில் கொள்ளத்தக்கது.

அறிக்கையின் சில பகுதிகள் ஏற்கனவே பூர்த்தியாகிவிட்டன என்றும், தற்போது கிடைத்துள்ள சில தகவல்களின்படி, மூன்று பேரின் (குழு உறுப்பினர்கள்) ஒரே கருத்தைக் கொண்டதாக அந்த அறிக்கை இருக்காமல், அம்மூவரும் ஒருவருக்கொருவர் மாறுபாடான கருத்துக்களை அவ்வறிக்கையில் தெரிவிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

குறிப்பாக, திரு—கொச்சி மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரேவிதக் கருத்து இருக்காது என்றும், அதுபோலவே பம்பாய் மாநிலத்தைப் பற்றியும் அவர்களிடை ஒருமித்த கருத்து இல்லையென்றும் தோன்றுகிறதாம்!

குழுவின் இரு உறுப்பினர்கள், மலபார் மாவட்டத்தை திரு—கொச்சி மாநிலத்துடனும், திருவாங்கூர் தமிழகப் பிரதேசங்களை சென்னைமாநிலத்துடன் இணைத்துவிட்டுப் புதிய கேரள மாநிலம் நிறுவவேண்டும் என்று கருதுவதாகவும், இக்கருத்துக்கு மூன்றாவது உறுப்பினர் பலமான ஆட்சேபனைகள் தெரிவிப்பதாகவும், அவர், திரு-கொச்சி மாநிலம் இப்போதிருப்பதைப் போலவேதான் இருக்க வேண்டுமென்று வலியுறுத்துவதாகவும் தெரியவருகிறது.

மாநில புனரமைப்புக் குழுவிடம் இதுவரையிலும் 8,943 பேர் வாக்குமூலம் கொடுத்துள்ளனர் என்றும், திரு-கொச்சியிலிருந்து 148 பேர் வாக்குமூலம் தந்துள்ளனர் என்றும், மற்ற 'பி' பிரிவு மாநிலங்களுள் ஐதராபாத் மாநிலத்திலிருந்துதான் அதிக அளவாக 789 வாக்குமூலங்கள் தரப்பட்டுள்ளன என்றும், மற்ற மாநிலங்களுள் பெப்சுவில் 368-ம், மைசூரில் 364-ம், இராஜஸ்தானில் 156-ம், திரு-கொச்சியில் 148-ம், மத்திய பாரத்தில் 113 பேரும் வாக்குமூலம் தந்துள்ளனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஊர்வலங்களைத் தடை செய்ய வேண்டாம்

வருகிற ஆண்டில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில், வாக்குப் பதிவு செய்யப்படும் தினத்தன்று, ஒரு தொகுதியில் ஊர்வலங்கள் தடை செய்யப்படவேண்டியது அவசியமில்லை," என்று, பிரதம தேர்தல் அதிகாரி சுகுமார் சென்னுடன் கலந்தாலோசித்த 4 அகில இந்திய அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனராம்.

சர்க்காரது உதவியுடன், தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிக்கான வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு ஜூன் திங்களில் இந்திய சர்க்கார், பல்வேறு மாநில சர்க்கார்களுக்குமாக மொத்தம் ரூ. 53,25,210 கொடுத்துள்ளனர் என அறியக் கிடக்கிறது.

நகரசபைகளுக்கான தேர்தல்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜூலை 19—

சென்னை மாநிலம் முழுமையிலுமுள்ள நகர மன்றங்களை இரு கூறுகளாகப் பிரித்து, அவைகளுக்கான தேர்தல் நடைபெற நாட்கள் நிர்ணயம் செய்து சென்னை சர்க்கார் உத்திரவொன்று பிறப்பித்துள்ளனர்.

வடஆற்காடு மாவட்டத்தில்—குடியாத்தம், வாலாஜாபேட்டை, ஆரணி, வாணியம்பாடி ஆகியவைகளும், செங்கற்பட்டு மாவட்டத்தில்—காஞ்சீபுரமும் முதல் பிரிவு நகர சபைகளில் அடங்கியிருக்கின்றன.

இந்த நகர மன்றங்களின் தேர்தல்களுக்கு நோட்டீஸ் பிரசுரம் ஆகஸ்டு 16-ல் செய்ய வேண்டுமென்றும், ஆகஸ்டு 24, 25, 26-ஆகிய 3 நாட்களிலும் அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும், அபேட்சை மனுக்களின் பரிசீலனை ஆகஸ்டு 27-ல் நடைபெறுமென்றும், அப்பீல்கள் எதுவும் இல்லாமலிருந்தால்—செல்லுபடியாகும் அபேட்சகர்களின் பட்டியல் பிரசுரம் ஆகஸ்டு 31-ந் தேதி என்றும், எதிர் அப்பீல்கள் எதுவும் இருந்தால் — செப்டம்பர் 4-ல் அபேட்சகர் பட்டியல் வெளியிடப்படுமென்றும், அக்டோபர் 10-ந் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் என்றும், மறுநாளே—அக். 11-ல் வாக்குச் சீட்டுகள் எண்ணுதல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வடஆற்காடு மாவட்டத்தில்—வேலூர், ஆம்பூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகியவைகளும், செங்கற்பட்டு மாவட்டத்தில் — செங்கற்பட்டு, திருவள்ளூர் ஆகியவைகளும் இரண்டாவது பிரிவு நகர சபைகளில் அடங்கியுள்ளன.

இவற்றின் தேர்தல்களுக்கான நோட்டீஸ் பிரசுரம் ஆகஸ்டு 22-ந் தேதியென்றும், அபேட்சைகள் தாக்கல் ஆக. 30, 31, செப். 1 என்றும், அபேட்சைகள் பரிசீலனை செப். 2—என்றும், செல்லுபடியாகும் அபேட்சைகளின் பட்டியல் வெளியீடு செப். 6—என்றும், அப்பீல்கள் இருந்தால் செப். 10—என்றும், தேர்தல் நடைபெறும் நாள் அக். 27—என்றும், வாக்கு எண்ணுவது அக்டோபர் 28—என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

★

குடியாத்தம் நகர சபை வேண்டுகோள்

"வரப்போகும் நகரசபைத் தேர்தல்களில், வாக்குச் சீட்டில் குறிபோடும் வாக்குமுறை கூடாது; பழைய வாக்களிப்பு முறையையே (அபேட்சகர்களின் சின்னங்கள் உள்ள பெட்டியில் வாக்குச் சீட்டுப்போடும் முறை) பின்பற்ற வேண்டும்,"

என்று, சென்னை சர்க்காரை குடியாத்தம் நகர சபை கேட்டுக்கொண்டிருக்கிறது.

திராவிட மொழி இலக்கியங்களில் அமெரிக்கர் ஆர்வம்

ஆங்கிலமாக்க பெரும் பொருள் ஒதுக்கல்

சென்னை, ஜூலை 19—

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலுள்ள இலக்கியச் செல்வங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவென அமெரிக்க போர்ட் நிறுவனம் ஏராளமான அளவு நிதி ஒதுக்கியுள்ளது.

அமெரிக்க, ஐரோப்பிய மக்களுக்கு இத்தகைய இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்திருப்பதால் மொழிபெயர்ப்பில் ஊக்கம் காட்டப்படுகிறது.

இவ்வேலையில் ஒத்துழைக்கும்படி தென்னிந்திய சர்வகலாசாலைகளின் துணைவேந்தர்களை அமெரிக்க நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்காக ஆலோசனை நடத்த துணைவேந்தர்களின் கூட்டமொன்று சீக்கிரத்தில் நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரயில்வே உணவு தானிய கடைகள் மூடப்படுமா?

இலட்சியத்திற்கு மாசு விளைவிக்கும் நடவடிக்கைகளை ஒழிக்க சிபாரிசு

புதுடில்லி, ஜூலை 16—

இரயில்வே இலஞ்ச ஊழல் விசாரணைக் கமிட்டி சமர்ப்பித்துள்ள 300 பக்கங்கள் கொண்ட குறிப்பீட்டில், நிர்வாகத்தின் நற்பெயரைக் கறைப்படுத்துவதும், நாட்டின் நடைமுறை ஒழுக்கத்துக்கு மாறாக மக்களை நடக்கும்படி தூண்டுவதுமான இலஞ்ச ஊழல் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்கான சீர்திருத்த இயக்கத்தை' பொதுமக்கள் தலைவர்களும், உயர்தர அதிகாரிகளும் முன்நின்று நடத்திவைக்க வேண்டுமென்று வலுவாகக் கோரப்பட்டிருக்கிறது.

'கீழ்த்தரச் சிப்பந்திகளுக்குச் சரியான இலட்சியங்களும், ஒழுக்கங்களும் கற்பிக்கப்பட்டால், இரயில்வே ஊழியர்கள் அவற்றின்படி நடக்க முன்வருவார்கள்; அத்துடன் தங்கள் வர்க்கத்தினரிடமிருந்து இலஞ்சப் பழக்கத்தை ஒழிக்க உறுதியான முயற்சிகளும் செய்வார்கள்' என்ற கருத்தையும் அக்குழு தெரிவித்திருக்கிறது.

இவ்வறிக்கை, 75,000 வார்த்தைகள் கொண்டது; 14 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது; அனுபந்தங்களும் உள்ளன; 150-க்கு மேற்பட்ட சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளது.

(இதன் சுருக்கமொன்று ஏற்கனவே நம் இதழில் வெளிவந்துள்ளது.)

இலஞ்சப் பழக்கத்திற்குக் காரணமென்ன?

'போர்க் காலத்தில், 'முதன்மை அளிக்கும் முறை' அமுலுக்கு வந்ததினாலும், போக்குவரத்து வசதி மிகக் குறைவாக இருந்ததினாலும் புதுமுறையான இலஞ்சப் பழக்கங்கள் தலையெடுத்தன; யுத்தத்துக்குப் பின்னரும் போக்குவரத்து நிலைமை திருப்திகரமாக இல்லாமையினால், இவைகள் மேலும் தொடர்ந்து இருந்துவருகின்றன.

'இரயில்வே ஊழியர்கள் பிரத்தியேகமான சமூகத்தினர் அல்ல' வென்று குழு சுட்டிக் காட்டிவிட்டு, 'இலஞ்ச ஊழல், நாணயக் குறைவு, வியாபார தந்திரங்கள் முதலியன நிலவும் பொதுவான சூழ்நிலையில் இவர்கள் மட்டும் யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது வீண்தான்,' என்று குறிப்பிடுகிறது.

யோக்கியப் பொறுப்புள்ள போலீஸ் படை அவசியமாம்!

'எந்த சர்க்கார் இலாகாவிலும், இலஞ்சப் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதற்கு—குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் நவீன விஞ்ஞான முறைகளில் பயிற்சி பெற்று, திறமையும், நாணயமும் உள்ள போலீஸ் படை, முதல் முக்கியத் தேவை என்பதை மறந்துவிடக் கூடாது,' என்று குழு அறிவுறுத்துகிறது.

'ஒரு இலாகா தன் விசேடப் பொறுப்புகளையும் நிறைவேற்றிக் கொண்டு, அதே சமயத்தில் அதைச் சார்ந்த 'சமூகத் துரோகி'களைச் சரிவர அடக்கிக் கண்காணிப்பதும் மிகச் சிரமமான காரியம்; இதைச் செய்வதற்கான ஏற்பாடும், அமைப்பும் இதில் இல்லை,' எனவும் குழு குறிப்பிடுகிறது.

பலவீனமான! மேற்பார்வையாம்

'விதிகள், சட்டதிட்டங்கள், இலாகா கட்டளைகள் முதலியன சரிவர பின்பற்றப் படுகின்றனவா என்பது பற்றி கண்டிப்பான மேற்பார்வை இரயில்வேக்களில் இல்லை' என்று குழு நினைக்கிறது.

இரயில்வே ஊழியர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருக்கும்போது, இதற்கேற்ற வகையில் கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை உயராததன் விளைவாக மேற்பார்வை வேலை பலவீனப்பட்டுவிட்டதென்று குழு அபிப்பிராயப்படுகிறது.

ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு கூடாதாம்!

"உயர்ந்த அதிகாரிகள், கீழ்த்தர ஊழியர்கள் ஆகியோர் பெறும் ஊதியத்தில் உள்ள பெரும் ஏற்றத் தாழ்வு குறைக்கப்பட வேண்டும்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வைத்திய உதவி வசதிகளை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும்; சிப்பந்திகளுக்கு இளைப்பாறும் விடுதிகள் அமைத்துக் கொடுப்பதற்கான திட்டம் அனாவசிய காலதாமதம் செய்யப்படாமல் விரைவில் நிறைவேற்றிவைக்கப்பட வேண்டும்; சிப்பந்திகளுக்கு வீடுகள் கட்டித் தரும் வேலையும் துரிதப்படுத்தப்படவேண்டும்."

சீசன் டிக்கெட்டுகளில் புகைப்படம் வேண்டுமாம்!

"மாதாந்திர நகர்ப்புற சீசன் டிக்கெட்டுகள், அதிக அளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன வென்று கமிட்டி கண்டுபிடித்திருக்கிறது; எனவே எதிர்காலத்தில் இந்தடிக்கெட்டுகளில், அதன் சொந்தக்காரர்களின் புகைப்படமும், அவரது கையெழுத்தும் இருக்க வேண்டும்" என்றும் சிபாரிசு செய்திருக்கிறது.

ஏழைகளை துன்புறுத்துவோர் மீது நடவடிக்கையாம்!

டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வது குறித்து அக்குழு, 'பொறுப்புள்ள அதிகாரிகளும், மாணவர்களும் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும்,' என்றும் சிபாரிசு செய்திருக்கிறது. மேலும், ஏழைகளையும், எழுத்தறிவில்லாத கிராமவாசிகளையும் துன்புறுத்தும் இரயில்வே சிப்பந்திகள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

உணவு விநியோக உரிமை இனி யாருக்கு?

இரயில் நிலையங்களில் உணவு விநியோக ஏற்பாடுகள் செய்வதற்குள்ள உரிமையை பெரிய காண்டிராக்டர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்றும், உட்குடி வைத்தலைத் தடுக்கும் விதியைக் கண்டிப்பாக அமுல் நடத்த வேண்டுமென்றும், காண்டிராக்டுகள் கூட்டுறவு சங்கங்களுக்கும், சமூக சேவை நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் குழு சிபாரிசு செய்துள்ளது.

உணவு தானியக் கடைகள் எடுபட வேண்டுமாம்!

மேலும் அக்குழு, உணவு தானியக் கடைகள் கூடிய விரைவில் எடுத்துவிடப்பட வேண்டும் என்றும், சர்க்கார் வேலைக்கு ஆட்கள் தேர்ந்தெடுப்பது பற்றி ஆராய்வதற்காக சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழு, இரயில்வே உத்தியோகங்களுக்கு ஆட்கள் எடுப்பதற்கான நடைமுறை பற்றியும் பரிசீலிக்க வேண்டும் என்றும், இரயில்வேக்களில் கிடைக்கக்கூடிய பல உத்தியோகங்கள், இதர விவரங்கள் பற்றிய விளக்கக் கைப்புத்தகம் ஒன்றை இரயில்வே குழு வெளியிட வேண்டும் என்றும், ஸ்டோர் சாமான்கள் வாங்குவது போன்ற மற்றும் சில பிரச்சினைகள் குறித்தும் சிபாரிசுகள் செய்துள்ளது.

கீனியாவில் 'பயங்கரவாதி'கள் என்று கருதப்படும் 309 சுதேசிகளின் நிலங்களைச் சர்க்கார் பறிமுதல் செய்திருக்கிறது.

செய்திச் சுருள்

★

மதுரை சிங்காரவேலர் நினைவுப் படிப்பகம்

10—7—55 மாலை 6 மணிக்கு மேற்படி படிப்பகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது சென்ற மாதத்தில் நடைபெற்ற படிப்பக 3-வது ஆண்டு விழா வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்ட பின், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சர்க்கார் கைத்தொழில் இலாகா தொழிலாளர்சங்கம்

சென்னை, ஜூலை 19—

14—7—55 மாலையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் சர்க்கார் கைத்தொழில் எஞ்சினீயரிங் தொழிற்சாலையில் ஆட்கள் குறைப்பும், ஆள்மாற்றமும் செய்யப்படுவதைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

புகலூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கம்

15—7—55ல் நடைபெற்ற மேற்படி சங்கப் பேரவைக் கூட்டத்தில், தோழர்கள் ஜி. ராமய்யா தலைவராகவும், டி. சி. மூர்த்தி செயலாளராகவும், டி. ஆர். முத்துசாமி, ஏ. முத்துசாமி, சி. மொட்டையன் ஆகியோர் முறையே துணைத் தலைவர், துணைச் செயலாளர், பொருளாளராகவும், மற்றும் 10 தோழர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செங்குன்றம் வ. உ. சி. மன்ற 3-ம் ஆண்டு விழா

12—7—55 மாலை 6 மணிக்கு செங்குன்றம் அடுத்த கிராண்டுமென் மன்றத்தின் மூன்றாம் ஆண்டு விழா தோழர் காஞ்சி-மணிமொழியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் அ. சுப்பிரமணியன் முன்னுரைக்குப் பின், தோழர்கள் ஏ. கே. சாமி, இளம்பரிதி, என். வி. நடராசன் ஆகியோர் பேசினர். இறுதியில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

மதுரை முத்து படிப்பகம்

17—7—55 காலை 10 மணியளவில், இலட்சுமிபுர வட்டாரத்திலுள்ள மேற்படி படிப்பகத்தின் செயற் குழுக் கூட்டம் தோழர் வாழவந்தான் தலைமையில் நடைபெற்றபோது, படிப்பகத்தின் மூன்றாவது ஆண்டு விழாவை ஆகஸ்டு முதல் வாரத்தில் நடத்துவதென்றும், அதுபோது மாநில மாநாட்டு நிதிக்கு படிப்பகத்தின் சார்பில் ரூ. 300 அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கிராம முன்னேற்ற சங்கம்

துவக்கவிழாப் பொதுக்கூட்டம்

16—7—55 காலை 10 மணிக்கு ஆரணி வட்டம் ரகுநாதபுரம் கிராமத்தில், திரு. மொ. சக்ரவர்த்தி தலைமையில், மாவட்ட ஆட்சி மன்ற பாடசாலையில் கிராம முன்னேற்ற சங்க துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 'கிராம முன்னேற்றம்' என்பது பற்றி தோழர்கள் ஏ. கே. குமாரவேலன், இராமச்சந்திரன், எஸ். ஏ. கைலாசன் ஆகியோர் பேசியபின், சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மா. மு. கழக அமைப்புக் கூட்டம்

14—7—55ல், பட்டுக்கோட்டை திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், வட்ட தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூடி, 21 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும், செயலாளராக எம். பேரான் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ந் தேதியன்று திராவிடமெங்கணும் மும்முனைப் போராட்ட நினைவு நாள் நடைபெற்றுள்ளது; சிற்றூர்களிலும், பேரூர்களிலும் கொடியேற்று விழாவும், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க்களத்தில் அடக்குமுறைகளுக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன்!

அன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

சென்னை 40-வது வட்டம்

15—7—55 காலை 10 மணிக்கு, சேப்பாக்கம், பார்த்தசாரதி நாயுடு தெருவில், தோழியர் அலமேலு அப்பாதுரை கழகக் கொடி ஏற்றுவித்தார்; இரவு 8 மணிக்கு, 13, அருணாசல ஆச்சாரி தெருவில், தோழர் பொன்னுரங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மும்முனைப் போராட்டத்தில் உயிரிழந்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர், தோழர் கா. அப்பாதுரையார், போராட்ட இலட்சியங்கள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

சென்னை 42-வது வட்டம்

17—7—55 காலை 7 மணிக்கு, கழகப் பணிமனையில் கொடியேற்றுவிக்கப்பட்டது; கருத்துள்ள ஓவியக் கண்காட்சி பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. காலை 9-30 மணிக்கு தோழர் மு. வரதராசன் தலைமையில், தோழர்கள் எல். கோபால், க. சண்முகம், ஏ. கே. நடராசன், பூ. அரங்கசாமி, க. இலக்குமணன், பி. எஸ். சண்முகம், கோ. இளவரசு, க. சே. அன்பரசு, இளம்பரிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

உசிலம்பட்டி

15–7–55 மாலை 4-30 மணிக்கு, கழகச் சார்பில், மும்முனைப் போராட்ட நினைவு நாளையொட்டி தோழர் ல. தனுஷ்கோடி கழகக் கொடியை ஐந்துலாந்தலில் ஏற்றி வைத்தார்.

குடந்தை

17—7—55 மாலை, வெள்ளி விழா பூங்காவில் நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். எஸ். கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் பேசிய பின், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ, மும்முனைப் போராட்டம்—ஐந்தாண்டுத் திட்டம்—நேருவின் சோஷலிசம் ஆகியவை பற்றி பேசினார்.

பொன்மலை—மேலக் கற்கண்டார்கோட்டை

15—7—55 மாலை 7 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் கே. துரைராஜ் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர் மலர்மன்னன் திராவிடப் பண் இசைத்தார். தோழர்கள் பலர் பேசிய பின், போராட்ட வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டதுடன், டால்மியாபுரத்தை 'கல்லக்குடி'யாக மாற்ற வேண்டுமென மத்திய அரசியலாரை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொள்ளாச்சி

17—7—55 மாலை 7 மணிக்கு, தேர்நிலையில், தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். சண்முகசுந்தரம் தலைமையில், விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. போராட்ட வீரர்களுக்கு வணக்கம் தெரிவித்தும், தற்கால அரசியல் நிலை—இந்தித் திணிப்பு ஆகியவை பற்றியும் தோழர்கள் க. துரைக்கண்ணன், கோ. கோபால், அ.ச. பானு, பி. கே. முத்து, டி. சதாசிவம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதுவை

15–7–55 மாலை 6-30 மணிக்கு, புதுவை தி. மு. கழகத்தில், வட்டக் குழுச் சார்பில், விழாக் கூட்டம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. இறைவிழியன், பொ. குப்புசாமி, வி. சுப்புரத்தினம், செல்வராசு, கோ. பாண்டியன், அமானுல்லா ஆகியோர் பேசினர்.

மதுரை

17—7—55ல், தோழமைக் கழகச் சார்பில் வடக்கு மாசி வீதி, இராமாயணச் சாவடி முன்பு, தோழர் அ. பிச்சை தலைமையில், விழா கொண்டாடப்பட்டது. தோழர் ராஜா கழகக் கொடி ஏற்றிவைத்தார்.

'தியாகம்'—'நல்ல பாதை' நாடகங்கள்

13—7—55ல், கொன்னிடம் கலை வளர்ச்சி நாடக மன்றத்தினரால், 'தியாகம்,' 'நல்ல பாதை' எனும் நாடகங்கள் தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றன.

அன்பளிப்பு

தெ. ஆ. மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி அவர்களின் ஆண் மகவுக்கு பனையகல்லூரில் 15—7—55-ல், முதல் ஆண்டு பூர்த்தியின் நினைவாகக் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சிகளில், ஏராளமான தோழர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

மீன் தொழில் இலாபகரமானது

காமராசர் தெரிவிக்கிறார்

"மீன் தொழில் இலாபகரமான ஒரு தொழிலாகும்; ஒரு ஏகர் நிலத்தில் கிடைக்கும் நெல்லை விட, ஒரு ஏகர் நிலத்தில் மீன்களை வளர்ப்பதால் கிடைக்கும் இலாபம் அதிகமாகும். இத்தொழிலை இன்னும் வர்த்தக அடிப்படையில் மேற்கொள்ளாமல் இருப்பது ஆச்சரியத்திற்குரியதாகவே இருக்கிறது," என்று, முதலமைச்சர் காமராசர், சென்னை திருவொற்றியூரில் நடைபெற்ற செய்தல் நில பரதவர் மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், "பரதவர்கள் தினமும் பிடிக்கும் மீன்களை, லேவாதேவிக்காரர்கள் தங்கள் வட்டிப் பணத்திற்காக எடுத்துச் சென்றுவிடுகின்றனர் என்பது எனக்குத் தெரியும். சர்க்கார் தற்போது சுலப வட்டியில் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது; கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும் நியாய விலையில் மீன் பிடிப்பதற்கான சாதனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது; அதுதவிர மீன்களுக்கு நல்ல மார்க்கெட் தேடுவதிலும் சர்க்கார் கவனம் காட்டிவருகிறது; எனவே, பரதவர்கள், தங்கள் ஊக்கம் குன்றிவிடாமல் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதில் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்," என்றும் கூறினார்.

ஆசிரியர்கள் அதிருப்தியுறுவதால் ஏற்படும் ஆபத்து!

டாக்டர் அமர்நாத் ஜா எச்சரிக்கை

நாகபுரி ஜூலை 19—

"அதிருப்தியுறும் ஆசிரியர்கள், நாட்டிற்கு அளவிட முடியாத தீங்கு விளைவிக்கக் கூடியவர்களாயும், மக்கள் வாழ்வின் துவக்கத்திலேயே நஞ்சூட்டிவிடக் கூடியவர்களாயுமிருப்பர்; எனவே, ஆசிரியர்களுக்குப் போதுமான பொருளாதார வசதி தருவதுடன், சமூகத்தில் அவர்களுக்குரிய உயர்ந்த இடத்தைத் தருவதின் மூலமும் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும்,"

என்று, பீகார் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவரான டாக்டர் அமர்நாத் ஷா குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஆறு - ஏழு ஆண்டு அனுபவம் மட்டும் பெற்ற ஒரு மாவட்ட அதிகாரிக்கோ, துணை நீதிபதிக்கோ தரப்படும் 'நிலை', கல்வித் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்ற ஒரு கல்லூரித் தலையாயருக்கு இல்லாமலிருப்பது, எனக்கு கோபத்தைத்தான் ஊட்டுகிறது

"ஆசிரியர்கள் பொருளாதாரத் தேவைகளால் கஷ்டப்படாமல் வைக்கப்பட்டிருந்தால்தான், சிறப்பாகப் பணிபுரிய முடியும்."

மத்தியப் பிரதேச சர்க்கார் கல்லூரி பேராசிரியர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசிய டாக்டர் ஷா, மேலும் கூறினார்:—

"பேராசிரியர்கள், 'தாங்கள் இன்னும் மேலான கவுரவத்துடன் நடத்தப்படவேண்டியவர்கள்தான்' என்பதை, தாங்களே எண்ணிப் பார்க்க வேண்டும்; தாங்கள் நேர்மையுடன் நடந்துகொள்வதின் மூலமும், மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதின் மூலமும், அவர்கள், மாணவர்களுக்கு முன்மாதிரியாய்—எடுத்துக்காட்டாய் — இலட்சியவான்களாய் இருக்க வேண்டும்; அப்போது பேராசிரியர்கள், சமூகத்தினுடையவும், மாணவர்களினுடையவும் மரியாதையைப் பெற்றுவிடுவர்."

தண்ணீர்ப் பஞ்சமும் தென்னாட்டில்தான் அதிகமாம்!

காமராசர் கூறுகிறார்!

'வடநாட்டைவிட தென்னாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருந்து வருகிறது; பல மாநிலங்களுக்கும் பயன்தரக் கூடிய வடநாட்டிலுள்ள கங்கை நதி போன்ற பெரிய நதிகள் தென்னிந்தியாவில் இல்லை; ஆனால் இங்குள்ள ஒரு முக்கிய நதியான காவிரி ஆறு தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது,"

என்று, சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் காரைக்குடி நகர் மன்ற வெள்ளி விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நிலச் சீர்திருத்தம் பற்றி காமராசர்

இரண்டு மூன்று கட்டங்களில் அமுலாகுமாம்!

சென்னை, ஜூலை 20—

நிலச் சீர்திருத்தம் இரண்டு, மூன்று கட்டங்களில் அமுல் செய்யப்படும் என்று முதன் மந்திரி காமராசர் குறிப்பிட்டிருக்கிறார்.

பல கட்டங்களாகத்தான், நிலச் சீர்திருத்தம் அமுல் செய்யப்பட முடியும் என்று இப்போது தெரிய வருவதாக அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

பல கட்டங்கள் பற்றி விளக்கம் கேட்கப்பட்டபோது முதன் மந்திரி, தாம் டில்லி சென்று அங்கு ஜூலை 22 முதல் 24-ந் தேதி வரை நடைபெறும் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் மற்றும் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பியதும் அதுபற்றிக் கூறமுடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஏறின விலைகள் இறங்குகின்றன!

சென்னை நகரத்தில், திடீரென உயர்ந்துவிட்ட கடலை எண்ணெய், நல்லெண்ணெய் விலைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துகொண்டே வருகின்றனவாம்! இவைகளின் விலைகள் மேலும் மேலும் குறைந்து வருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்!

கடலைப் பருப்பின் விலையில் 1-அணா குறைந்ததைத் தவிர, மற்ற சாமான்களின் விலைகளில் அதிக மாறுதலில்லையாம்!

குழந்தைகள் சினிமாப்பட சங்க நிர்வாகக் கௌன்சில், 1956 மார்ச் மாதத்திற்குள்ளாக, குழந்தைகளுக்கான சினிமாப் படங்கள் இரண்டைத் தயாரிப்பதென முடிவு செய்திருக்கிறது. அப்படங்களுக்கு ஏற்ற கதைகளை அனுப்பி வைக்கும்படி தேசத்திலுள்ள எழுத்தாளர்களைக் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மூன்று கதைகளை படப்பிடிப்புக்குத் தெரிந்தெடுத்து; ஒவ்வொரு கதைக்கும் சங்கம் . 3,000 வழங்கும்.

தாழ்த்தப்பட்ட-பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்கள்

கல்வி நிறுவனங்களில் இடம்பற்றி சர்க்கார் உத்தரவு

சென்னை, ஜூலை 20—

எல்லாக் கல்வி நிறுவனங்களிலும், அங்கங்குள்ள மொத்த இடங்களில் 16 சத விகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், 25 சத விகிதம் மற்ற பின் தள்ளப்பட்ட மாணவர்களுக்குமாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இது அடுத்த கல்வி ஆண்டிலிருந்தே-(1956-57) கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

இந்த உத்திரவுப்படி இனிமேல், சர்க்கார் பள்ளிகள், சர்க்கார் உதவி பெறும் இதர கல்வி நிறுவனங்கள், உத்தியோகக் கல்லூரிகள், நடுநிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள் ஆகிய எல்லாவற்றிலும் மேற்கண்ட விகிதப்படியே இடம் ஒதுக்கப்படும் என்றும், சர்க்காரின் நிதி உதவி பெறுவதற்கு இந்த முறையைக் கையாளுவது ஒரு நிபந்தனையாகும் என்றும், ஒதுக்கப்பட்ட இடங்களில் காலி இடம் இருந்தால் மற்ற விதிகளின்படி அவற்றை இதர வகுப்பினருக்குக் கொடுக்கலாமென்றும் தெரிகிறது.

'கொடியை அவமதிப்பது குற்றம்'

சென்னை சர்க்கார் அதிகாரி சொல்லுகிறார்

"தேசியக் கொடி பற்றி சில விதிகள் இருக்கின்றன; தேசியக் கொடியை அவமதிப்பது, அந்த விதிகளை மீறும் குற்றமாகும்"

என்று, சென்னை சர்க்கார் அதிகாரி ஒருவர், பெரியார் ஈ. வெ. ரா. அவர்களது முடிவு பற்றிக் கேட்கப்பட்டபோது கருத்தறிவித்திருக்கிறார்.

ரூ. 10-கோடி கூட்டுக் கடன்

சென்னை — ஆந்திரா எழுப்பக்கூடும்?

சென்னை, ஆந்திரா ஆகிய இரு மாநில சர்க்கார்களும், இம்மாத இறுதிக்குள்ளாக 12 வருடத்திற்கு 4 சத விகிதத்தில் 10 - கோடி ரூபாய் கூட்டுக் கடன் எழுப்புவர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது விஷயமாக சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், மாநிலத்திலுள்ள முக்கிய வர்த்தகர்கள், வியாபாரிகள், மற்றும் பல முக்கியஸ்தர்களைக் கூட்டி விவாதிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி கடன் எழுப்புவது குறித்தத் திட்டங்கள் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தவே அமைச்சர் சுப்பிரமணியம் கர்னூலுக்குச் சென்றிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டுக் கடன் தொகையான ரூ. 10 கோடியில் ஆந்திர மாநிலம் 3 கோடியும்; சென்னை மாநிலம் ரூ. 7 கோடியும் பெறும் என்றும் தெரிய வருகிறது.

சைகோனில் மீண்டும் கலகம்

சர்க்கார் ஆதரவுடன் ஆர்ப்பாட்டம்

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராக அமளி

சைகோன், ஜூலை 20—

இந்தோ-சீனா போர் நிறுத்த ஒப்பந்த அமுல் மேற்பார்வைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கியுள்ள ஓட்டல்களில் புகுந்து கம்யூனிஸ்டு எதிர்ப்புக் கலகக்காரர்கள் கலவரம் செய்திருக்கின்றனர்

போலீசார், கலகக்காரர்களைச் கலைக்க, கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியிருக்கின்றனர்.

கலகக்காரர்கள், ஓட்டலின் அறைகள் பலவற்றைத் தாக்கித் தகர்த்துவிட்டனர்.

நடைபெற்ற கலவரத்தில் மொத்தம் 60 பேர் தாக்கப்பட்டனராம்.

வியட்நாம் முழுவதும், தேர்தல் நடத்துவதை எதிர்த்து தென் வியட்நாம் முழுவதும், சர்க்காரின் ஆதரவுடன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருவது அறிந்ததே.

ஜினீவா ஒப்பந்த ஆண்டு விழா தினமாகிய இன்றும் அரசாங்கம் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. ஆர்ப்பாட்டம் இன்று கலகமாக உருப்பெற்றதாம்.

இந்தோ-சீன போர் நிறுத்த மேற்பார்வைக் குழுத் தலைவர் எஸ். தேசாயின் சாமான்களும், தஸ்தாவேஜுகளும் ஜன்னலுக்கு வெளியே எடுத்தெறியப்பட்டனவாம்.

80 நாள் நடைபெற்ற வேலை நிறுத்தம்

நேற்றுடன் முடிவுற்றது

கான்பூர், ஜூலை 21—

சென்ற மே திங்கள் 20-ந் தேதியன்று ஆரம்பித்து, சுமார் 80-தினங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த கான்பூர் துணி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், நேற்றோடு முடிவடைந்து விட்டதெனவும், தொழிலாளர்கள், இன்று முதல் மீண்டும் தங்கள் வேலைகளுக்குத் திரும்புவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள குடி ஆலை மஸ்தூர் சபையின் ஆதரவுடன் நடைபெற்ற மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில், கான்பூரிலுள்ள 11 ஆலைகளைச் சேர்ந்த சுமார் 46,000-தொழிலாளர்கள் ஈடுபட்டனர் என்பது நினைவிருக்கலாம்.

கழகக் கூட்டங்கள்

★

செங்குன்றம்

பணியாத்தம் கோவில் தெருவில்
22—7—55 மாலை 5½ மணிக்கு
தலைவர்: க. சுந்தரராசன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

சென்னை (சேப்பாக்கம்)

(40-வது வட்ட தி. மு. கழக 2-வது ஆண்டு விழா)
பார்த்தசாரதி நாயுடு தெருவில்
23—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கோ. செங்குட்டுவன்
பேசுவோர்:
கண்ணதாசன்
சா. அப்பாதுரை
இளம்பரிதி
பொன்னுரங்கம்

★

நகரி

சந்தை தோப்பில்
பொட்டி ஸ்ரீராமுலு அரங்கில்
23—7—55 மாலை 6-மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
என். ஏ. ரசீத்

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்கட்கு

"ஆகஸ்டு திங்கள் முதல் வாரத்தில், இராமநாதபுர மாவட்ட தி.மு.கழகச் சார்பாக பொதுச் செயலாளருக்கு வரவேற்பும், மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாவும், விருதுநகரிலும், அருப்புக்கோட்டையிலும் நடத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, கிளைக் கழகச் செயலாளர்கள், தங்கள் கடமையை உணர்ந்து தங்கள் ஊர் மாநில மாநாட்டு நிதிப் பங்கை தாமதம் செய்யாமல் உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று; இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

முள்ளிப்பட்டு (வ.ஆ. மாவட்டம்) பகுத்தறிவு மன்ற முதலாவது ஆண்டு விழா

23—7—55 மாலை 6 மணிக்கு, சுப்பிரமணியர் கோயில் எதிரில், தோழர் எஸ். எஸ். முருகேசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, எஸ். எஸ். தென்னரசு, கே. கே. மாணிக்கவேல், இராதாகிருட்டிணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இரவு 10 மணிக்கு; தோழர் பி. ஏ. நாராயணசாமி தலைமையிலும், தோழர் ஏ. எம். விசுவநாதம் முன்னிலையிலும் பகுத்தறிவு மன்றத்தினரால், '(வால்மீகி) இராமாயணம்'—நாடகம் நடைபெறும்.

புற்று நோய்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதற்காக, லண்டன், பாரிஸ், ஜூரிச், ஸ்டாக்ஹோம், நியூயார்க், வாஷிங்டன் போன்ற இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களின் உதவியுடனும், கூட்டுறவுடனும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமாம்.

ஏற்கனவே கல்கத்தா, சித்தரஞ்சனில் உள்ள புற்று நோய் மருத்துவ மனையில், புற்று நோய் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று இருப்பதாயும், அங்கு முறையான ஆராய்ச்சிகள் ஏற்கனவே நடைபெற்று வருவதாயும், அந்த ஆராய்ச்சி நிலையம், நிறுவப்பட இருக்கும் புற்று நோய் தேசிய ஆராய்ச்சிக் கழகத்திற்கு கேந்திரமாக அமையும் என்றும் கூறப்படுகிறது.

பாபுராவ்: நேருவை குறுக்கு விசாரணை செய்தார்!

புதுடில்லி, ஜூலை 20—

அண்மையில், நேருவைக் கொல்ல முயன்றதாகப் பாபுராவ் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கொன்றில், பிரதமர் நேரு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

இந்திய சர்க்கார் அயல்நாட்டிலாகா காரியாலயத்திலுள்ள நேருவின் அறையில் இந்த விசாரணை ஒரு மணி நேரமாக நடைபெற்றதாகவும், விசாரணையின் போது பாபுராவ் கைகளில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும், விசாரணை ஆரம்பமாகுமுன், பண்டிதர், வழக்கப்படி நியாயப் பிரமாணம் செய்துகொண்டார் என்றும் கூறப்படுகிறது.

நேருவிடம் பாபுராவ் பல கேள்விகளைக் கேட்டதாகவும், ஆனால் அவைகளனைத்தும், 'சம்மந்தமற்றவை' எனக் கருதப்பட்டு நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது. பாபுராவ் சார்பில் வழக்கறிஞர்கள் எவரும் வாதாடவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நேரு தம்முடைய வாக்குமூலத்தில், குறிப்பிட்ட அந்த நபர்தான் தம்மைக் குத்த முயன்றார் எனத் திட்டவட்டமாகத் தன்னால் கூற முடியாதென்றும், அவ்வெதிரியைப் போன்ற நபர் ஒருவர்தான் தம்மைக் குத்த முயன்றதாக ஞாபகம் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

மீனவர் துணிகரம்

வெள்ளப் பெருக்கில் பாய்ந்து பலரைக் காப்பாற்றினார்

நாகபுரிக்குச் சுமார் 8 கல் தொலைவில் உள்ள கோலார் எனும் நதியில், எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாகப் பலர் தண்ணீரோடு அடித்துச் செல்லப்பட்டனர் என்றும், அந்த ஆபத்தினின்றும் அவர்களனைவரையும் ஒரு மீனவர் வெகு சாமர்த்தியமாகக் காப்பாற்றினார் என்றும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வேலை செய்து முடித்துவிட்டுத் தங்கள் சொந்தக் கிராமம் திரும்பிக் கொண்டிருந்த அந்த 18 பேர்களில் இருவர் ஆண்களென்றும், பாக்கி 16 பேரும் பெண்களென்றும், ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருக்கையில் திடீரென வெள்ளப் பெருக்கேற்பட்டு, அவர்களை அடித்துச் சென்றதென்றும், இதனைக் கண்ணுற்ற யாதவ் சங்காராம் எனும் அந்த மீனவர், மிகத் துணிகரமாகப் பெருவெள்ளத்தில் குதித்து ஒருவர் தவிர மற்றையோர் அனைவரையும் காப்பாற்றினார் என்றும் கூறப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட ஒருவர் 18 வயதுடைய நங்கை என்று தெரிகிறது.

மாதாந்திரப் பேச்சு வகுப்பு

23—7—55 மாலை 3½ மணிக்கு, சென்னை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் மாதாந்திரப் பேச்சு வகுப்பு நடைபெறும். திரு. வல்லை பாலசுப்பிரமணியம் தலைமையில் திருமதிகள் பார்வதி, அனுசூயா மோகனசுந்தரம், தாமரைக்கண்ணி ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

23—7—55 மாலை 2½ மணிக்கு, சென்னை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'அறிவுடைமை' என்பது குறித்து திரு. மயிலை சிவமுத்து, திருமதி குடாமணி ஆகியோர் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.